**Volume : 4, Issue : 1, May 2020** **Pg. No. 60 - 69**

புதிய அவையம்
காலாண்டு மின்னிதழ்
ISSN : 2456-821X

## அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை உணர்த்தும் வாழ்வியல் அறம்

**முனைவர் ஆ. மரிய தனபால்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 02.

==================================================================

### முன்னுரை

நல்லொழுக்கங்கள் மட்டுமே மனிதனை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். அப்படிப்பட்ட ஒழுக்கங்களை சங்ககாலம் தொடங்கி இன்றுவரை பல்வேறு புலவர்கள் பல்வேறு செய்யுள்களின் வாயிலாக எடுத்துரைத்து வருகின்றனர். அவர்களுள் அறநெறிகளை எளிய பதத்தில் எவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான தமிழில் இயம்பியவர்களில் அதிவீரராமபாண்டியர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் பாண்டிய மன்னர்களுள் ஒருவரும் ஏறக்குறைய 40 ஆண்டுகாலம் ஆட்சிப்புரிந்ததாக வரலாறு எடுத்துரைக்கும் செய்தியாகும். மன்னர் மட்டுமன்றி நற்திறம்வாய்ந்த தமிழ்ப்புலவராகவும் விளங்கினார். வடமொழி மற்றும் தமிழ்மொழி தெரிந்ததால் நளன் கதையை இரண்டுமொழியிலும் கூறப்பெற்ற கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு நைடதம் என்னும் நூலை இயற்றினார்.

இதுதவிர காசிபுராணம், மாகபுராணம் இவற்றுடன் கொக்கோகம் எனப்படும் காமநூலையும் தமிழில் இயற்றியுள்ளார். மிகுந்த இறைபக்தி கொணடவரான இவர் தென்காசியில் சிவன் கோயில் ஒன்றும், விஷ்ணு கோயில் ஒன்றும் கட்டியுள்ளார். இதை 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் சிதம்பரதநாதகவி என்பவர் அதிவீரராம பாண்டியரைப் பற்றி இயற்றிய சீவலமாறன் கதை என்னும் நூலின் வாயிலாக அறியலாம். அதிவீரராம பாண்டியருக்கு சீவலமாறன் என்னும் சிறப்புப்பெயரும் உண்டு. இவை எல்லாவற்றிற்கும் மேலாக வெற்றிவேற்கை அல்லது நறுந்தொகை என்று அழைக்கப்படும் அறநூல் 136 அடிகளைக் கொண்ட நீதி நூலாகும். இது கற்பவர் மனதில் நிலைக்கும் செறிவுடன் இயற்றியுள்ளார். இந்நீதி நூலின்கண் காணலாகும் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்களை எடுத்துக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**கல்வியின் சிறப்பு**

கல்வி என்பது ஒருவரை நிறையறிவுடையவரக மாற்றும் மகத்தான பொக்கிசம் ஆகும். அறிவுத்திறன்களை மலர்வித்து வெளிக்கொணர்வதற்கும் அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு செய்விப்பதற்கும் உதவியாக அமையும் முயற்சி கல்வி என்று கொள்ளப்படுகின்றது. அது தம்மால் அமையுங்கால் கற்றல் என்றும், பிறர் உதவியால் அமையுங்கால் கற்பித்தல் என்றும் கூறப்படும். இன்றுள்ள சமூகமரபுகளை எதிர்வரும் சந்ததியினருக்குக் காத்தளிக்கும் வாய்ப்பாக அமைவது கல்வி எனலாம். அஃது அறிவையும், பயிற்சியையும் குழந்தைகளுக்கு அளிப்பததோடு எதிர்காலத்தில் அவர்கள் வாழ்வாங்கு வாழத்தேவையான நல்லொழுக்கங்களை அவர்களிடையே வளர்க்கவும் இன்றியமையாததாகும். அதனால் வாழ்க்கையின் விழுமியங்களையும் உயர்ந்த நோக்கங்களையும் கடைப்பிடிக்கத் தேவையான பயிற்சி அளித்தல் கல்வியின் நோக்கமாக அமைய வேண்டும். இந்நோக்கத்தை அடையவேண்டுமெனில் **“கல்விக் கழகு கசடற மொழிதல்”** (பா.எண்: 02) என்று குற்றம்

இல்லாமல் பேசுவதே கல்விக்கு மதிப்பு என்றும், அக்கல்வியைக் கற்பித்த ஆசிரியன் கண்ணாற்காணப்பெறும் கடவுள் ஆவாரென்பதை,

**"எழுத்தறி வித்தவன் இறைவனாகும்"** (பா.எண்: 01) என்றும் அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுவர். ஆசிரியரை மதித்து அவரிடமும் மற்றோரிடமும் குற்றமில்லாதவாறு பேசுபவருக்குக் கல்வியின் ஞானம் கிடைக்கும் சிறந்த நூல்களைப் படித்துத்தெளிந்து அடக்கமாக ஒழுகுவதே அறிவுடையோர்க்கு மதிப்பாகுமென்பதை,

**"அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்"** (பா.எண்: 14) என்பது நீதியாகும்.

**கல்லாமையின் இழிவு**

எக்குலத்தில் பிறந்தாலும் எவராக இருந்தாலும் கல்வியினால் மட்டுமே ஒருவர் மதிக்கப்படுவார். இதனை,

**"எக்குடிப்பிறப்பினும் யாவரே யாயினும்**
**அக்குடியிற் கற்றோரை மேல்வருகென்பர்"** (பா.எண்:38) என்று

வெற்றிவேற்கை குறிப்பிடுகிறது. இதைவிடுத்து நால்வருணத்தில் தம்மை முதலானோர் எனக்குறிப்பிட்டுக் கொண்டாலும், படிக்காதவனாயின் அவர் தாழ்ந்தவர் ஆவார் என்பதை,

**"ஒருவன் கற்றில னாயின் கீழிருப் பவனே"** (பா.எண்:37) எனக்கற்றோருக்கு முதலிடம் வெற்றிவேற்கை. படிக்காத ஒருவர் தன்குடிபிறப்பின் மேன்மையைப் பேசுதல் நெற்பயிரோடு தோன்றிய பதர் போன்றவர் என்பதை,

**"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்**
**நெல்லினுட் பிறந்த பதராகும்மே"** (பா.எண்:36) எனப்பகடி செய்கிறார்

ஆசிரியர். இந்நிலையைப் போக்க,

**"கற்கை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே"** (பா.எண்:35) பிச்சையெடுத்துப் படிப்பது இழிவில்லையென குறிப்பிடப்படுகிறது. கல்லாமையே பெரிய இழிவு என ஆசிரியர் இடித்துரைக்கிறார். மேலும், குழந்தை செல்வத்திற்கு நிகரான செல்வம் உலகில் இல்லையென்பர். அக்குழந்தையைப் பெறுபவருக்கு அறத்தைப் புகட்டும் விதமாக,

**"அச்சம் உள்ளடக்கி அறிவகத் தில்லாக்**

**கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி**

**எச்சமற் றேமாந் திருக்கை நன்றே"** (பா.எண்:40) என ஆண்மையும் அறிவும் இல்லாத பிள்ளைகளைப் பெறுவதைவிட அக்குடி பிள்ளைகள் இல்லாமற்போவது நல்லதென இயம்புகிறார்.

**செல்வத்தின் இயல்பு**

செல்வம் என்பது நிலையற்ற ஒன்றாகும். பனம்பழம் பெரிய விதையிலிருந்து தோன்றும். மரம்மிக உயர்வாக வளர்ந்தாலும் ஒருவர் தங்குவதற்குக்கூட நிழல் தராது. பிறருக்குப் பயன்படாத உயர்செல்வம் பயனற்றதென்பதை,

**"தேம்படு பனையின் திரற்பழத் தொருவிதை**

**வானுற வோங்கி வளம்பெற**

**வளரினும் ஒருவர்க் கிருக்க நிழலா காதே"** (பா.எண்:16) என்ற பாடல்வரிகளின் வாயிலாக செல்வம் நிலைற்றது என்கிறார்.

**"வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை"** (பா.எண்:15) என்று வாழ்வோர் உலகில் பலர் உண்டு. அப்படிப்பட்ட நண்பர்களும் சுற்றமும் இல்லையென்பதை,**"கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை"** (பா.எண்:49) என்கிற நிலைமாறி உதவும் மனப்பாம்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**"இல்லோர் இரப்பதும் இயல்பே"** (பா.எண்:57),

**"இரந்தோர்க் கீவது உடையோர் கடனே"** (பா.எண்:58) என்ற வரிகளுக்கிணங்க இரப்போர்க்கு இருப்போர் அளிப்பது சிறந்த பண்பாகும் என்று எடுத்துரைக்கப்படுகின்றன. இப்பண்புகள் இல்லாமல் வாழ்வோருக்கு எச்சரிக்கிறார்.

**"சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்**

**அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்"** (பா.எண்:05) செல்வமும் மேன்மையும் உடையோர் தம்நிலைமாறி உணவின்றி அறத்திற்குச் சோறுபோடும் சத்திரத்தை அடைந்தாலும் அடைவர் என்றும்,

**"அறத்திரு பிச்சை கூவியிரப்போர்**

**அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்"** (பா.எண்:52) வெளியில் நின்று கூவிப்பிச்சை எடுப்போர் தமது நிலைமாறி ஒருநாள் அரசாளும் பதவி பெறினும் பெறுவர் என்றும்,

**"குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்**

**அன்றேப் பகலே அழியினும் அழிவர்"** (பா.எண்:53) மலையளவு செல்வம் பெற்றவரும் ஒரே நாளில் அதனை இழத்தலும் கூடும். செல்வம் என்பது ஒரே நிலையில் இருக்கக்கூடியது அன்றென நினைவுப்படுத்துகிறார்.

**"யானைக் கில்லை தானமும் தருமமும்"** (பா.எண்:41) யானைக்கு நீண்ட கையிருப்பினும் அது தானமும் தருமமும் செய்வதில்லை. செல்வம் இருப்பவரெல்லாம் தானம் செய்வதில்லை. தானம் செய்வதற்கு நல்மனத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**நட்பின் சிறப்பு**

நட்பு இல்லாமல் மனித உறவுகள் மேம்படுவதில்லை. ஒருவருடைய வாழ்வின் வெற்றிற்கு எங்காவது ஒரு மூலையில் நண்பரின் துணையிருக்கும். நட்பாவதற்கு முன்பே

குணநலன்களைப் புரிந்துகொண்டு பழகினால் நாளும் இன்பமளிக்கும். இல்லையேல் ஒவ்வொரு நாளும் போட்டியும் பொறாமையுடனும் வாழ்க்கையை நகர்த்த வேண்டிவரும்.

**“ஒருநாள் பழகினும் பெரியயோர் கேண்மை**

**இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே”** (பா.எண்:34) என்ற வரிகளில் ஒருநாள் பழகினாலும் மேலோர் நட்பு ஆழமாகவும் உறுதியாகவும் இருக்குமென ஆசிரியர் குறிப்பிடுகிறார். நட்புடன் பழகுவதற்கும் ஒரு தகுதிவேண்டும்.

**“சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்”** (பா.எண்:44) என்ற தொடர் கறையான் எப்பொருளையும் அரித்துவிடக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கிறதோ அதுபோல் கீழ்மக்கள் எதற்கும் கேடு செய்வர் என்பதை இயம்புகிறது. மேலும் நற்குணமில்லாதவரிடம் கொண்ட நட்பு நிலைப்பதில்லை.

**“நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**

**நீர்க்குட் பாசிபோல் வேர்கொள் ளாதே”** (பா.எண்:33) வரிகளின் வாயிலாக எத்தனை ஆண்டு பழகினாலும் கீழோர் நட்பு நீர்ப்பாசி போல உறுதி பெறாது என்று டவலியுறுத்துகிறார். ஒருவருக்கு வரும் உயர்விற்கும் தாழ்விற்கும் அவரே காரணம் ஆவாரென்பதை, **“பெருமையும் சிறுமையும் தான்தர வருமே”** (பா.எண்:30) என்ற தொடர் குறிப்பிடுகிறது. எனவேதான் உன் நண்பன் யாரென்று குறிப்பிடு உன்னை யாரென்று சொல்லிவிட முடியும் என்ற சொலவடை நினைவு கொள்ளதக்கதாகும்.

**பெண்ணின் பெருமை**

உலக உயிர்களில் மேன்மை பொருந்தியது பெண் பிறப்பாகும். ஏனெனில் உலகத்தில் உள்ள உயர்திணை உயிர்களைத் உருவாக்குவதற்கு ஆணும் பெண்ணும் காரணமாக இருப்பினும் பெரும்பங்கு பெண்ணையே சாரும் என்பதில் ஐயமில்லை. ஆகையால்தான் ‘தாயிற் சிறந்த கோயிலும் இல்லை’ எனக் குறிப்பிடுவர். குடும்ப வாழ்க்கையில்

பெண்ணின் பங்களிப்புப் போற்றதக்கதாகும். எனினும் கணவனிடம் எதிர்வாதம் செய்யாமல் அமைதியாகக் குடும்பத்தை நடத்துவதே இல்லறப் பெண்களின் பண்பாகும். **"பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்"** (பா.எண்:11) என்ற தொடர் தற்கால சூழலக்கு ஒவ்வாத ஒன்றாகத்தென்படின், நற்பெண்கள் அதிலுள்ள உளவியல் கருத்தோடு ஒப்புநோக்கினால் குடும்பத்தில் அமைதி ஏற்படும். ஏனெனில் கணவனுடன் வாக்குவாதம் செய்வதால் சண்டையும், சச்சரவும்தான் மிஞ்சும். விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் நிம்மதி நிலைக்கும். நற்குடியில் பிறந்த பெண்களுக்கு அழகு கணவனைப் பேணுவதுதான் பெருமை என்பதை,

**"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்"** (பா.எண்:12) என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுவர். இல்வாழ்க்கையில் கணவருக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் மிகமுக்கிய அங்கமாகும். இருவரில் ஒருவருக்கு ஏதேனும் நேர்ந்தால் குடும்ப வாழ்வு சீரழந்துவிடும் என்பதால் ஆண் கோபத்தில் பேசும்போது பெண் எதிர்வாதம் செய்யாதிருத்தல் உடல்ரீதியாகவும் குடும்பரீதியாகவும் நலம்பிறக்கும். இல்லையேல், **"கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்"** (பா.எண்:22) என்ற தொடர் திருமணம் செய்து கொண்ட பெண்கள் எல்லோரும் பெண்கள் இல்லை. இல்லறம் பேணும் பெண்களே உண்மையான மனைவிர் ஆவாரென இயம்புகிறது.

**"நல்ல ஞாலமும் வானமும் பெறினும்**

**எல்லா மில்லை இல்லில் லோர்க்கே"** (பா.எண்:59) என்ற வரிகளின் வாயிலாக, உலகில் அசைவற்ற செல்வம் பெற்றிருந்தாலும் மாண்புடைய மனைவியைப் பெறாவிடில் எப்பயனும் இல்லையென்று அதிவீரராம பாண்டியர் எடுத்துரைக்கிறார். இதிலிருந்து இல்லற வாழ்விற்குப் பெண்ணின் நற்குணங்கள் மட்டுமே பெருமை சேர்க்கும் என்பது புலனாகிறது.

**இல்லற வாழ்வில் ஆண்**

இல்லற வாழ்விற்குப் பெண்ணிற்கு எப்படியொரு கட்டுபாடு இருக்கிறதோ, அதே அளவிற்கு ஆணிற்கும் உண்டு. குடும்ப வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிப்பதற்கு முக்கியமான காரணி கள்ள உறவு ஆகும். எதைவேண்டுமானாலும் ஒருபெண் பங்கிட்டுக் கொள்ள ஒத்துக்கொண்டாலும், வேறொரு பெண்ணுடன் தன்கணவனின் உடல்சார்ந்த புணர்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள ஒப்புக்கொள்ளமாட்டாள்.

**"எழிலார் முலைவரி விழியார் தந்திரம்**

**இயலா தனகொடு முயல் வாகாதே"** (பா.எண்:80) என்ற வரிகளில், பெண்மீது கொண்ட காதலால் அவர்கள் கூறும் பொருத்தமற்ற காரியங்களை செய்யக்கூடாதென ஆசிரியர் எச்சரிக்கிறார்.

**"தன் மனை யாளைத் தாய்மனைக்கு அகற்றி**

**பின்பவட் பாரால் பேதையும் பதரே"** (பா.எண்:69) திருமணம் செய்துகொண்ட பெண்ணை, அவர் பிறந்த தாய்வீட்டிற்கு அனுப்பிவிட்டு அவளை கவனியாது விடும் அறிவல்லாதவரை எதற்கும் பயனற்ற பதருக்கு ஒப்பிடுகிறார். இதுவொருபுறமிருக்க, தன் மனைவியை வீட்டில் தனிதிருக்க செய்து அயலானது மனைவியை விரும்பிச் செல்வோரைப் பதர் எனக்குறிப்பிடுகிறார்.

**"தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்**

**பிறன்மனை கேகும் பேதையும் பதரே"** (பா.எண்:71) பிறர் பழிக்கும்படி வாழும் வாழ்க்கை விரும்பதகாத ஒன்றாகும். கணவன் மனைவி என்கிற விதத்தில் ஒருவருக்கொருவர் புரிதலோடும் குடும்பத்தின் சிறப்பையும் மதித்து வாழவேண்டும்.**"அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை"** (பா.எண்:46) என்றும் அறிவில்லாத முட்டாள்கள் மட்டுமே பிறர் இகழ்ச்சிக்கு உள்ளாவார்கள் என அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்.

**ஆள்வோருக்கு அழகு**

ஒரு நாட்டை வழிநடத்தக்கூடிய தலைவருக்கு என்று அரசியல் நாகரிகமும், அரசியலமைப்பின் கொள்கை மற்றும் கோட்பாடுகள் உண்டு. அதை மதித்து குடிமக்கள் போற்றும்படி ஆளும் அரசியல் தலைவர்கள் என்றென்றும் போற்றப்படுவர். **“மன்னர்க் கழகு செங்கோல் முறைமை”** (பா.எண்:05) நீதிமுறைப்படி மக்களாட்சியின் மாண்பு சீர்குலையாதவாறு நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்து செல்வோரே தலைசிறந்தவராவார். தலைவருக்குப் பக்கபலமாக இருக்கும் மந்திரியாக உள்ளவர்கள் மக்களின் எதிர்ப்பார்ப்பையும், ஏக்கத்தையும் எடுத்துரைத்து வாட்டத்தைப் போக்க முன்வரவேண்டும். ஒரு திட்டத்தால் அரசியல் கொள்கை முடிவால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் மற்றும் பயன்களைத் திட்டம் தீட்டுவதற்கு முன்பே ஆலோசனை வழங்க வேண்டும். **“மந்திரிக் கழகு வருபொருள் உரைத்தல்”** (பா.எண்:08) என்ற வரியில் பின்னால் வரச்கூடிய விளைவுகளை மதிநுட்பத்தால் அறிந்து செயல்படுவதுதான் மந்திரிக்கு சிறப்பாகும் எனக்குறிப்பிடுவர் அதிவீரராம பாண்டியர்.

ஒரு நாடு சிறந்த முன்னேற்றப்பாதையில் செல்கிறது என்றால் அந்நாட்டு மக்களின் பொருளாதாரமும், மக்களிடம் வசூலிக்கும் வரியையும் வைத்து அமைகிறது.

**“குடியலைத் திரந்துவெங் கோலோடு நின்ற**
**முடியுடை யிறைவனாம் மூர்க்கனும் பதரே”** (பா.எண்:66) என்கிற வரிகளில்,

கொடுங்கோலனாய்க் குடிகளை வருத்தி வரிப்பொருள் வாங்கும் கொடிய அரசன் ஒன்றிற்கும் உதவாத பதர் போன்றவர் ஆவார்.

**“தறுகண் யானை தான்பெரி தாயினும்**
**சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே”** (பா.எண்:60) அஞ்சாமையுடைய யானை உருவத்தால் பெரிதாக இருந்தாலும் சிறிய மூங்கிற்கோலுக்குப் பயப்படும். அதுபோல் தம்மை ஆள்வோர் இளைஞராயினும் செங்கோலுக்குக் குடிமக்கள் அஞ்சி நடப்பர் என்பது பாடல் வரிகளின் பொருளாகும். இதிலிருந்து நாட்டை ஆள்வோர்க்க வயது முக்கியமல்ல, நல்லாட்சி

நடத்தும் இளையோர் ஆனாலும் மக்களால் மதிக்கப்படும் தலைவராக முடியுமென குறிப்பிடுகிறார். இல்லையேல், “**கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்**

**கடும்புலி வாழுங் காடு நன்றே”** (பா.எண்:63) என்கிற வரிகளின் வாயிலாக, கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டில் வாழ்வதைவிடக் கடும்புலி வாழும் காட்டில் வாழ்வதுமேல் என்கிற மனநிலைக்குக் குடிமக்கள் வந்துவிடக்கூடும் என அறியப்படுகிறது.

**முடிவுரை**

மனிதனுடைய வாழ்க்கையானது இல்லறம், துறவறம் என்னும் இருநிலைகளில்தான் அடங்கும். இவற்றுள் இல்லற வாழ்க்கையே சிறப்புடையதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒன்றாகும். இவ்விரண்டில் ஒருவர் தன்வாழ்க்கையை எப்படித் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் பிறர்பழிக்காதவாறு மதிப்புடன் வாழ்ந்து மடிவதே பிறப்பின் சிறப்பாகும். அச்சிறப்பை அடைவதற்கு ஒருவருக்கு என்னென்ன தேவையாகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து நல்விழுமியங்களுக்கு உகந்தவராக வாழவேண்டும். அப்படிப்பெற்ற நல்விழுமியங்களைக் குடும்பம் கல்வி, செல்வம், அன்பு, மனிதநேயத்தின் வாயிலாக அடையும் முடியும். மேற்குறிப்பிட்ட அனைத்தையும் பெற்றுள்ள மனிதனால் மதிப்புடன் வாழாதவருக்கு,

**“வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்**
**சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்”** (பா.எண்:72) என்ற வரிகளில் வாயே பறையாகவும் நாவே அடிகோலாகவும் கொண்டு சான்றோர் பலகாலும் சொல்லும் உறுதிமொழிகளைக் கருத்துடன் கேட்பீராக என்று அதிவீரராம பாண்டியர் தன்னுடைய அறக்கருத்துக்களின் வாயிலாக எச்சரிக்கை விடுக்கிறார்.

**துணைநின்ற நூல்**

ஏழிளந்தமிழ்
உரையாசிரியர் முனைவர்.வ.சுப. மாணிக்கனார்
காவேரி பதிப்பகம்
உறையூர்
திருச்சிராப்பள்ளி – 620 003.